## குடிவரவு மோசடி பற்றிய எச்சரிக்கை!

## குடிவரவு தொடர்பாக இத்தகைய ஆலோசனைகள் உங்கள் முன் வைக்கப்படுகின்றனவா?

உத்தியோக அனுமதிப் பத்திரங்களுக்கு உத்தரவாதம்!

இலவசமான பாண்டித்தியங்கள்! உயர்ந்த சம்பளத்துடன் கனடாவில் வேலைகள்! குறுகியகால முன் அனுபவம் போதுமானது அல்லது முன் அனுபவமே தேவையில்லை! இலவசமான விமான பயணச்சீட்டுகள் அத்துடன் தங்குமிடவசதிகள்! உத்தரவாதமான உத்தியோகங்கள்! விசேடசெயல்முறைத் திட்டங்கள் ! ஒரு விடுதியகத் துப்பரவாளராக பணியாற்ற ஒரு மாதத்திற்கு $4,000 உழைத்தல் !

**ஒரு மோசடிக்குப் பலியாக வேண்டாம். ஒரு ஆலோசனை மெய்யாக இருக்க முடியாதவாறு நல்லதாக இருந்தால், அது மோசடியாக இருக்கலாம். நீங்கள் அறிய வேண்டியது என்னவென்றால்:**

- நீங்கள் ஒரு நுழை அனுமதிக்கோ ஒரு அல்லது கனடிய குடியுரிமைக்கோ விண்ணப்பம் செய்வதற்கு ஒரு குடிவரவு பிரதிநிதியை நீங்கள் அமர்த்தத் தேவை **இல்லை**.
- குடிவரவு பிரதிநிதிகளுக்கு, கனடா அரசாங்க உத்தியோகத்தர்களுடன் ஒர விசேட தொடர்புகளும் **இல்லை**. அத்துடன் அவர்கள் உங்களுக்கு ஒரு நுழை அனுமதிக்கு உத்தரவாதம் கொடுக்கமுடியாது..
- கனடா தூதரகங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள் அத்துடன் உப தூதரகங்களிலும் உள்ள **அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்** மட்டுமே ஒரு நுழை அனுமதியைக் கொடுக்கலாமோ, கொடுக்காமல் விடலாமோ என்பதை தீர்மானிக்கலாம்.
- பொய்யான ஆவணங்களை பயன்படுத்தும் உந்தலுக்கு வசப்படவேண்டாம். ஏனென்றால் அது உங்கள் விண்ணப்பம் மறுக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.
- இணைய வலைய மோசடிகள் அத்துடன் பொய்யான இணைய்த்தளங்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். கனடா குடியுரிமை அத்துடன் குடிவரவின் (CIC) உத்தியோக பூர்வ இணையத்தளம் **www.cic.gc.ca**.
- எந்த விதமான நுழை அனுமதிக்கும் CIC யின் இணையத்தளத்தில் இருந்து, இலவசமான விண்ணப்பப் படிவங்களையும் வழிகாட்டிகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- உலகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள கனடா நுழை அனுமதி அலுவலகங்கள் அனைத்திலும் நடைமுறைக்கான கட்டணம் சம அளவாக விதிக்கப்படும். அதாவது சட்ட பூர்வமான நாணயமாற்று விகிதத்தின் படி, குறிப்பிட்ட நாட்டின் நாணயத்தில், கனடிய டாலர் தொகைக்கு நிகராகக் கட்டணங்கள் அறவிடப்படும்.
- கனடிய நுழை அனுமதி அலுவலகங்கள், ஒருவரின் சொந்த வங்கிக் கணக்குக்ளில் பணத்தை இருமாறு அல்லது ஒரு குறிப்பிட்ட தனியார் பண மாற்று நிலையத்தின் ஊடாக பணத்தைச் செலுத்துமாறு உங்களிடம் **என்றுமே கேட்கமாட்டா.**
- மேலதிக தகவல்களுக்கு கனடா குடியுரிமை-குடிவரவுத் திணைக்களத்துடனோ அல்லது உங்களது பிரதேசத்திற்குரிய நுழை அனுமதி அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் ஒரு குடிவரவு பிரதிநிதியை அமர்த்த விரும்பினால் **எத்தகைய ஒருவரால் சட்ட பூர்வமான முறையில் உங்களை பிரதிநிதித்துவம் செய்யமுடியும்** என்பதை அறிவது உட்பட மேலும் தகவல்களுக்கு, குடியுரிமை-குடிவரவு இணையத் தளத்தில் குடிவரவு பிரதிநிதித்துவம் பற்றிய பக்கங்களைப் பார்க்கவும். (http://www.cic.gc.ca/english/information/representative/index.asp).